# மெட்ரோ ரயில் சேவை நீட்டிப்பு

சென்னை, அக். 23: சென்னை மெட்ரோ ரயில் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை இயக்கப்படுகிறது. பண்டிகை விடுமுறையொட்டி இன்று மற்றும் நாளை ரயில் சேவை இரவு 11 மணி வரை நீட்டிக்கப்படுகிறது.

விடுமுறை முடிந்து திரும்பி வரும் பயணிகள் வசதிக்காக 27ம் தேதி காலை 5.30 மணி முதல் இரவு 9 மணி வரை ரயில்கள் இயக்கப்படும். 29ம் தேதி இரவு 11 மணி வரையும், நவம்பர் 2ம் தேதி காலை 5.30 மணி முதல் இரவு 9 மணி வரையும் ரயில் சேவை நீட்டிக்கப்படுகிறது.